

புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி நகர்மன்ற வளாகத்தில், புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து நடத்தும், 8ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் நேற்று முன்தினம் (03.10.2025) தொடங்கி வைத்தார்கள். உடன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாநகராட்சி துணை மேயர் எம். லியாகத் அலி மற்றும் புத்தகத் திருவிழா ஒருங்கிணைப்பாளர்கள், அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கரூரில் நடைபெற்ற அரசியல் பரப்புரை கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், வீரக்கல் புதூர் கிராமம், புதுசாம்பள்ளி பகுதியைச் சேர்ந்த ஸ்ரீநாத் அவர்களது குடும்பத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10 இலட்சத்திற்கான காசோலையினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் 02.10.2025 அன்று வழங்கினார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் சுகுமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மாநகராட்சி பொது நிதி சுமார் 85.25 எண்பத்தி ஐந்து லட்சத்தி 25 ஆயிரம் மதிப்பீட்டில் மண்டலம் இரண்டு மற்றும் மூன்றிற்கு உட்பட்ட கீழ்க்காணும் பகுதிகளில் மக்களின் அடிப்படை திட்டங்களை மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்.



புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி நகர்மன்ற வளாகத்தில், புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து நடத்தும், 8ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழா அரங்கில் அமைக்கப்பட்டிருந்த கோளரங்கத்தினை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் நேற்று முன்தினம் (03.10.2025) தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னத்துரை, மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி மற்றும் புத்தகத் திருவிழா ஒருங்கிணைப்பாளர்கள், அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### சேலம், நேரு கலையரங்கில் நடைபெற்ற மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை

# பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான செஸ் போட்டிகள்

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

*சேலம், அக். 5- சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் 2025--2026 ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான செஸ் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மற்றும் சேலம் மாநகராட்சி மேயர் ஆர்.இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் சேலம், நேரு கலையரங்கில் நேற்று (04.10.2025) தொடங்கி வைத்தார்கள்.*

*பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது :*

*முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத்துறையில் தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாக உயர்த்தும் நோக்கோடு பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மாணவர்கள், இளைஞர்கள், விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.*

*அந்தவகையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப்போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுப்பிரிவினர், மாற்றுதிறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்கள் ஆகிய 5 பிரிவுகளின் கீழ் தடகளம், நீச்சல், கூடைப்பந்து, வாலிபால், கபடி, மண்டல அளவிலான கடற்கரைப் கையுந்துப்பந்து உள்ளிட்ட பல்வேறு வகையிலான போட்டிகள் நடத்தப்படுகிறது. குறிப்பாக மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் கடந்த 26.08.2025 முதல் 12.09.2025 வரை அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு அதில் வெற்றி பெற்றவர்கள் மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளில் பங்கேற்பதற்காக தேர்வு செய்யப்பட்டனர்.*

*அதன் தொடர்ச்சியாக 2025-2026 ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான செஸ், கேரம் மற்றும் அரசு ஊழியர்களுக்கான கேரம் விளை யாட்டுப்போட்டிகள் சேலம் நேரு கலையரங்கத்தில் இன்று தொடங்கி 13.10.2025 வரையில் நடைபெறுகிறது.*

*இன்றைய தினம் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான செஸ் விளை யாட்டுப்போட்டிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இப்போட்டியானது 05.10.2025 வரை நடைபெறுகிறது.*

*இப்போட்டியில் தமிழ்நாடு முழுவதும் உள்ள 38 மாவட்டங்களில் இருந்து மாணவ, மாணவியர்கள் என இரு பிரிவுகளாக பங்கேற்றுள்ளனர். மேலும், கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான செஸ் போட்டிகள் 06.10.2025 முதல் 08.10.2025 வரையிலும் நடைபெறவுள்ளது.*

*அதேபோன்று பள்ளி மாணவ, மாணவியர்களுக்காக கேரம் விளை யாட்டுப்போட்டிகள் 05.10.2025 முதல் 07.10.2025 வரையிலும், கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு 08.10.2025 முதல் 10.10.2025 வரையிலும், அரசு ஊழியர்கள் ஆண்கள், பெண்களுக்கான கேரம் விளையாட்டுப் போட்டிகள் 11.10.2025 முதல் 13.10.2025 வரையிலும் நடைபெறவுள்ளது. மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுள்ள அனைவருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துகொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், சேலம் மாநகராட்சி துணை மேயர் திருமதி சாரதாதேவி, சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அபிநயா, மண்டல குழுத் தலைவர் திருமதி உமாராணி, மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவரஞ்சன், மாநகர நல அலுவலர் மரு.முரளிசங்கர், வட்டாட்சியர் பார்த்தசாரதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி அவர்களின் ஆலோசனைப்படி நல்லம்பள்ளி வடக்கு ஒன்றிய செயலாளர் வைகுந்தம் ஏற்பாட்டில் நடைபெற்ற SIR சிறப்பு திருத்தம் குறித்து வாக்கு சாவடி BLA.2, BLC,BDA ஆலோசனை கூட்டத்தில் தருமபுரி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டி. செங்குட்டுவன் மற்றும் முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி பேசினர். கூட்டத்தில் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் பி.கே.தாஸ்,முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் எச்சனஹள்ளி வி.சண்முகம்,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜகோபால், சக்திவேல், ரவி, ஐ.டி.விங் யாஸ்மின் உள்ளிட்ட தி.மு.க.வினர்.

### அமைச்சர்கள் கே.என்,நேரு - எஸ்,ரகுபதி - சிவ,வீ,மெய்யநாதன் வாழ்த்துரை! புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

# விராலிமலை மத்திய ஒன்றிய செயலாளர் கே.பி.அய்யப்பன் இல்ல விழா!

## கே.கே.செல்லப்பாண்டியன்– பெரியண்ணன் அரசு - கவிச்சுடர் கவிதைப்பித்தன்- த.சந்திரசேகரன்–எம்.எம்.அப்துல்லா- டாக்டர் வை.முத்துராஜா பங்கேற்பு!

*புதுக்கோட்டை, அக்.5- புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை மத்திய ஒன்றிய செயலாளர் கே.பி.அய்யப்பன் இல்ல புதுமனை புகுவிழா பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தலைமையில் நடைபெறுகிறது. கழக முதன்மைச் செயலாளர் நகரப்புற வளச்சித்துறை அமைச்சர் கே என் நேரு குத்துவிளக்கு ஏற்றி வைத்து வாழ்த்துரை வழங்குகிறார். கே.பி.அய்யப்பன் தமிழ் மணி இவர்களது குழந்தைகள் ஹேமச்சந்திரன், முகேஷ் கண்ணன் ஆகியோரது காதணி விழா*


*இன்று (05.10.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள் புதுக்கோட்டைக்கு மாவட்ட செயலாளர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சிகளுக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் வரவேற்புரையாற்றுகிறார்*

*கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி*

*த.சந்திரசேகரன், பி.டி. அரசகுமார், மு.பி. மணி. தென்னலூர் எம்.பழனியப்பன், டாக்டர் அஞ்சுகம் பூபதி. கே.ஆர்.என்.போஸ், கே. எஸ். சந்திரன், மு.பி.ம. சத்தியசீலன், அ.இளங்குமரன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, சன் சி.உதயகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். மேலும் இந்நிகழ்வுகளில் எம்.எம்.அப்துல்லா, ந.இளையராஜா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், அறந்தாங்கி ராஜன், உதயம் சண்முகம், திலகவதி செந்தில், க.நைனா முகம்மது, டி.செல்வம், சுப. சரவணன், புதுகை விஜயா, எஸ்.ஆர்.அண்ணாமலை, வி.என்.மணி, பரணி இ.ஏ.கார்த்திகேயன், ரெ.தங்கம், செ.அசோக் பாண்டியன், கார்த்திக் தொண்டைமான், வே.ராஜேஸ், எம்.எம். பாலு, அரு.வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம். லியாகத் அலி, கீரை. தமிழ் ராஜா, சு.சண்முகம், என். சேட்டு, ஓ.எஸ்.வெங்கடாச்சலம், மு.க.ராமகிருஷ்ணன், தவ. பாஞ்சாலன், எம்.பரமசிவம், வெ.முத்துக் கிருஷ்ணன், மா.தமிழ் அய்யா, சி.சண்முகம்,. ஆர்.சாமிநாதன் செ.குறிஞ்சிவாணன் மற்றும் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட, ஒன்றிய, மாநகர, நகர, வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி. திருஞானசம்பந்தம்
### அக்டோபர் 5 (1983)



**காளையார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளராக பணியாற்றியவர்.**

**பாகனேரி ஊராட்சி மன்றத் தலைவராகவும், 1968 முதல் 1974 வரை தமிழக சட்டமன்ற மேலவையில் கழக உறுப்பினராக பணியாற்றியவர்.**

**1966ஆம் ஆண்டு சிவகங்கையில் நடைபெற்ற ஒன்றுபட்ட இராமநாதபுரம் – மதுரை மாவட்டங்களின் கழக மாநாட்டில் தொண்டர்படைத் தலைவராக பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று 1963 முதல் 1965 வரை சிறையிலிருந்தவர். விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**‘கழகம் வளர்த்த கருப்பு தங்கம்’ என அப்பகுதி கழகத் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. மூர்த்தி
### அக்டோபர் 5 (2001)



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.**

**சட்டக் கல்லூரியில் பயிலும் போதே கழகத்தில் இணைந்து பணியாற்றியதோடு, வேலூர் மாவட்ட அவைத்தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**சோளிங்கர் பேரூராட்சி தலைவராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**